திராவிடநாடு

1—3—59 | வார வெளியீடு | விலை 16 காசு

விடுதலை! விடுதலை!!

★

★

கேலி பேசினர் வீணர்கள்.

துப்பாக்கியைக் காட்டிற்று அரசு.

சிறை! தண்டனை!! வெளிநாடு போ!!!

ஆணவம் சீறியது; அடக்கிட முனைந்தது.

ஆனால்

வென்றார் மகாரியாஸ் பாதிரி!

பிரிட்டன் பணிந்தது!

சைப்ரஸ் தீவு பெற்றது விடுதலை!

இது

விடுதலைத் தாகத்துக்கு வெற்றி!

உறுதிக்கு கிடைக்கும் வெற்றி!

விடுதலை வீரர்களுக்கு வெற்றி!

எனவே

பெறுவீர் நீ விரும்;

கொள்வீர் உறுதி;

அடைவோம் திராவிடம்!!

பணம் பாழாகும் விதம்!

பொதுமக்களிடமிருந்து சர்க்கார் வரியாக வசூலிக்கும் பணம், நாட்டு மக்களின் நலன்களுக்காகச் செலவளிக்கப்பட வேண்டும் — அதுவே ஒரு ஜனநாயக ஆட்சியின் முறையும் ஒழுங்குமாக இருத்தல்வேண்டுமென்று நாம் பல காலமாகவே கூறி வருகிறோம். வசூலாகும் பணத்தில் பெரும் பகுதியைக் காங்கியாரின் நோக்கத்திற்கும் விருப்பத்திற்கும் மாருக, பட்டாளம் என்ற பெயரால் செலவிட்டு வரும் போக்கை நாம் அன்றுமுதல் கண்டித்தே வந்திருக்கிறோம்.

நிர்வாகம் என்ற பெயரைச் சொல்லி நிதியின் பெரும் பகுதியைச் செலவிட்டுக் கொண்டிருந்தால், நாட்டின் முன்னேற்றம் காணமுடியுமா என்றும் கேட்டு வருகிறோம் — சர்க்காரின் தவறுகளைச் சுட்டிக்காட்டி நாம் ஏதாவது உருப்படியான யோசனைகளைக் கூற முற்பட்டால், "இவர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள், அப்படித்தான் பேசுவார்கள்" என்று கூறி மிக எளிதில் ஆட்சியாளர்கள் தப்பித்துக்கொள்கிறார்கள்.

இதோ, நாம் கூறும் குற்றச்சாட்டு, தேசிய ஏடுகள் இடமளித்து வெளியிடக் கூடிய கூடாரத்திலிருந்தே கிளம்புகின்றது.

"கவர்மெண்ட் வசூலிக்கும் வரிகள், அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பதில் நிர்வாகச் செலவிலேயே கழிந்துவிடுகின்றன"

தென்னிந்திய வர்த்தக சபையினர் இப்படியொரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளனர் — தீர்மானத்தை விளக்கத் தேசிய ஏடாம் 'சுதேசமித்திரன்' ஒரு படமும்போட்டு இந்தச் செய்தியை 24—2—59 இதழில் தந்துள்ளது. குழந்தைப்பாலை, அதனை ஊட்டிவளர்க்கும் செவிலித்தாயே குடித்துவிடுவது போன்ற ஒரு சித்திரத்தின்மூலம் சர்க்கார், பொதுப் பணத்தைப் பாழாக்கும் விதத்தை விளக்கி இருக்கிறது.

குழந்தை பாலின்றிப் பசியால், தன்னைப் பேணி வளர்க்கும் செவிலித்தாய் எங்கே என்று தேடி அலைகின்றது. செவிலித்தாயோ, குழந்தை படுத்துறங்கும் கட்டிலில் உட்கார்ந்து கொண்டு, குழந்தை அருந்தவேண்டிய பாலைத் தானே அருந்திவிட்டு, அகமும் புறமும் பூரிக்கும் நிலையில் காட்சி தருகிறாள். இப்படி ஒரு படத்தைத்தான் அந்த ஏடு வெளியிட்டு வர்த்தக சபையினரின் தீர்மானத்தை விளக்கியிருக்கிறது.

நிர்வாகம் என்ற பெயரால் இங்கு செலவிடப்படும்தொகையின் அளவை வேறு எந்த நாடும் எட்டிக்கூடப் பார்க்கமுடியாது. நிர்வாகச் செலவைக் குறைத்தும், முன்னேற்றத் திட்டங்களின் செலவை அதிகப்படுத்தியும்தான் மற்ற நாடுகள் எல்லாம் ஆட்சி புரிகின்றன. அப்படிச் செய்தால்தான், நாடும் மக்களும் நல்ல நிலையில் இருக்கமுடியும் என்று அங்கெல்லாம் கருதப்படுகிறது.

இங்கு, நிர்வாகத்திற்கு மட்டுமே அதிகம் தொகை செலவிடுகிறார்கள் என்று கருதிவிட வேண்டாம். நிர்வாகமோ அபிவிருத்தியோ இல்லாத வேறுபல தேவையும் அவசியமுமற்ற காரியங்களுக்கெல்லாம் இங்கு, 'நம்ம சர்க்கார்' பொதுப்பணத்தைத் தாராளமாகச் செலவிடுகிறது.

எடுத்துக்காட்டுக்கு ஒன்றைமட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறோம். இந்த உபகண்டத்தில் இருக்கும் கவர்னர்களுக்கு ஏதாவது நிர்வாகப்பொறுப்பு அளிக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டுப் பாருங்கள், பதில், "இல்லை" என்றுதான் கிடைக்கும். என்றாலும், அவர்கள் பெறும் ஊதியம், இந்நாட்டிலுள்ள எந்த உயர்தர **நிர்வாகி**யும் பெறாத அளவு அதிகப்படியான தொகையை, சொன்ன இடத்தில் கையெழுத்துப் போடவும், ஊர்கள் தோறும் உலா வரவும் என இருக்கும் நியமிக்கப்பட்டிருக்கும் கவர்னர்கள் பெறமுடிகிறதென்றால், இதன் பொருள் என்ன? நிர்வாகம் எங்கே? அபிவிருத்தி எங்கே? இந்த இரண்டு மற்ற காரியத்திற்குச் செலவிடப்படும் போக்கு எங்கே? என்றுதானே எவரும் எண்ணிப்பார்ப்பர். தென்னிந்திய வணிக மன்றத்தினர் மட்டுமல்ல; நாட்டின்முன்னேற்றத்தில், மக்களின் நல்வாழ்வில் அக்கறையும் பொறுப்பும் கொண்ட எவருமே சர்க்காரின் இந்தப் போக்கைக் கண்டித்தே தீருவர். பேச்சிலே சிக்கனமும் செயலிலே தந்நலத் தாராள மனப்பான்மையும் கொண்டு பொதுமக்களின் வரிப்பணத்தை வாரியிறைக்கும் போக்கை யார்தான் கண்டிக்கமாட்டார்கள்—கையாலாகாதவர்கள் தவிர!

பேச்சளவிலும் எழுத்தளவிலும் அபிவிருத்தித் திட்டங்கள் இருக்கின்ற அளவுக்குச், செயலளவில்கிடையாது. சிக்கனமாக வாழுங்கள், சிறு சேமிப்புத் திட்டத்துக்கு உதவுங்கள், கலகலவெனப் பொலபொலவெனக் புதல்வர்களைப் பெறுதீர்கள். நாட்டின் நல்வாழ்வுக்கு — முன்னேற்றத்திற்கு உதவுங்கள்—ஒத்துழையுங்கள். என்றெல்லாம் மேடையதிரப் பேசிவிட்டு, நிர்வாகத்தின் வாயிலை அணுகும் போது, அதையெல்லாம் மறந்து, சுகபோகம்தேடும் சுயநலம் குடிபுக இடந் தருவது, சர்க்காருக்கும் நல்லதல்ல—நாட்டுக்கும் ஏற்றதல்ல.

★

மார்ச் 15-ந் தேதி முதல் வெளிவருகிறது!

"முன்னேற்றம்"

(அரசியல், சமுதாய சீர்திருத்த வார ஏடு)

ஆசிரியர்:
பால்வண்ணன்

தனிப்பிரதி 16-காசுகள்
ஆண்டு சந்தா ரூ. 8—00

எல்லா இடங்களிலும் முன் பணம் கட்டும் ஏஜண்டுகள் தேவை.

விபரங்களுக்கு:—
முன்னேற்றம்
642, திருவல்லிக்கேணி ஐரோட்,
சென்னை-5.

கட்டுண்டோம்!

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 5 [1 3 59] தனிப் பிரதி 16-காசு [இதழ் 33

போடு! போடு! போதாது, இன்னும் போடு!!—என்று, போதை ஏறியவன் கூச்சல் போட்டபடியே, உள்ளே தள்ளிக்கொண்டிருந்தானனால், கடைசியில், அவன் வாழ்க்கைப் பாதைக்கே ஆபத்து வந்துவிடும். கொஞ்சம் போதை ஏறினலே, தள்ளாடும்! அதிகம் ஏற, ஏற, தன்னிலை மறந்து, பித்தனகி, கடைசியில் கட்டைமேறவேண்டிய கதியே வரும்!!

பலத்த மெஜாரிடி கையிலிருக்கிறது எனும் தைரியத்தால், ஆட்சிப்பீடமேறிய காங்கிரஸ், அன்று முதல், போடு! போடு! போதாது போடு!! என்றே, குவித்து வருகிறது, ஆணவச் சட்டங்களை. வெள்ளையன் காலத்தில், லைசென்சில்லாமல் கூட்டம் நடத்த முடியும்! இப்போது முடியாது!! அவன் காலத்தில் அடக்குமுறைகளிருந்தாலும், அவைகளை வீசும் போது, உள்ளத்தில் ஒரு பக்கம் 'அச்சமாவது' இருந்தது. சுயராஜ்யம் மலர்ந்த பிறகு, அச்சமில்லை, அச்சமில்லை, ஆயிரக்கணக்கில் சட்டம் போடு! என்று, சங்கநாதம் செய்கிறது சர்க்கார்.

வளரும் எதிர்க்கட்சிகளைக் காணக்காண, அவைகளை எப்படிச் சமாளிக்கலாம் என்று முயன்று முயன்று, மூக்குடைபட்டு, கொல்லைப்புற வழிகள் உள்ளனவா என்று தேடும் குள்ளநரிகளாகின்றனர் காங்கிரஸ் அமைச்சர்கள்! உள்நாட்டுத்துறை அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள், அண்மையில் சட்ட சபையில் கொண்டுவந்து, நிறைவேற்றியிருக்கும் 'சுவரொட்டி தடுப்பு மசோதா'' அத்தகைய ஒன்றுகும்!!

நாம் மட்டுமல்ல, சகல எதிர்க்கட்சிகளும்,—இது அக்கிரமம்! அநியாயம்! கூடாது! வேண்டாம்!!—என்று எடுத்துரைத்தன, சட்டமன்றத்தில். வெளி நடப்பும் செய்தன, இந்த 'அக்கிரமத்தைச் சகியோம்' என்று சொல்லி. ''என்ன வேண்டுமானலும் சொல்லுங்கள். நிறைவேற்றியே தீருவேன்'' என்று விடாப்பிடியாக இருந்து, மசோதாவை நிறைவேற்றி விட்டார் அமைச்சர்.

சுவரில் ஆபாசமானவைகளைச் சித்தரித்தால் கடுந் தண்டனை! வீட்டுக்காரர் அனுமதியின்றி ஒட்டினலும் தண்டனை!!—இதன்மூலம், மகத்தானதோர் சாதனையைச் செய்ததாகக் கருதுகிறது, இந்த அரசு

எதிர்க்கட்சிகளின் ஒரு திருத்தத்தைக்கூட ஏற்கவில்லை. மீண்டும் ஒருமுறை, இன்றைய அரசு, தனது ஆணவத்தை நிரூபித்துக்கொண்டுவிட்டது.

சுவரொட்டிகள் மூலம் விளம்பரம் செய்வதென்பது, இந்த நாட்டிலே மிகமிக எளிதான வழியாகும்! ஒட்டக்கூடாது என்று எவராவது விரும்பினல், இப்போதே பல சுவர்களில் காணலாம், ''நோட்டீசு ஒட்டாதே. தண்டனைக்குள்ளாவாய்'' எனும் எச்சரிக்கைகளை. மீறி ஒட்டுகிறவர்களை வழக்கு மன்றத்தில்நிறுத்தி, தண்டிக்கும்சட்டம் இப்போதே இருக்கிறது! போதாதாம், அது! அதிகார போதையின் உச்சக்கட்டத்துக்கு அதிவேகமாக விரைகிறது, சென்னை அரசு—புதிதாக ஒரு 'தனிச்சட்டம்' விரும்புகிறது!!

இப்படியெல்லாம் செய்து, எதிர்க்கட்சிகளின் பிரச்சாரத்தை, வளர்ச்சியைத் தடைசெய்துவிடலாம் என்று கருதுகின்றனர். சாகத் தவிப்பவன், கடைசி துரும்பின் மூலமாவது பிழைக்கமாட்டோமா என்று தத்தளிப்பானும்! ஆத்திரக்கடலில் சிக்கித் தவிக்கும் காங்கிரஸ் அரசும், அதே பேராசையுடன் தான் தவிக்கிறது!!

இச்சட்டம், ஜனநாயகத்தின் மீது வீசப்பட்ட இன்னொரு ஈட்டியாகும். செய்யுங்கள்—செய்யுங்கள்—முடிந்தமட்டும் செய்யுங்கள்--கட்டுண்டோம்-பொறுத்திருப்போம் — காலம் வராமற்போகாது என்று தெரிவித்துக்கொள்ளுகிறோம், ஆதிக்க அரசுக்கு.

★

காலம் வந்தது!!

"ஏ, பாதிரியே! பரமண்டலத்துப் பிதாவின் சேவையை விட்டு, எமது ஆட்சிப்பாதையிலா குறுக்கிடுகிருய்! ஓடு, உன் நாட்டைவிட்டு! உன்னை, வெகுதூரத்துக்கப்பால் கொண்டு போய் வைக்கிறோம் பார்!'' என்று, எந்த பிரிட்டன், கர்ச்சித்து, அவரை நாட்டைவிட்டே விரட்டியதோ,

அந்த மகாரியாஸ் பாதிரியாரை அழைத்து, கடந்த கிழமை கைகுலுக்கிற்று! கூடிப்பேசிற்று! சைப்ரஸ் தீவைக் குடியரசாக்கிவிட்டோம் என்கிற அறிவிப்பையும் தந்திருக்கிறது!!

நான்காண்டுகாலமாகச் சின்னஞ்சிறு தீவாம் சைப்ரசில் நடந்த விடுதலை எழுச்சியினை, உலகம் அறியும். கிரேக்கர்களும், துருக்கியரும் வாழும் அத்தீவில், ஆட்சி செலுத்தும் பிரிட்டன் அத்தீவுக்கு சுயாட்சி வழங்க மறுத்தது. கிரேக்கர்கள் சார்பில் உரிமைவேண்டி, கிளர்ந்தெழுந்தார் மகாரியாஸ்! துருக்கியரைத் தொலைக்கச் சதி செய்கிறார்—துவேஷத்தை மூட்டுகிறார் — பிரிவினை கேட்கிறார்—பேதமூட்டுகிறார், என்று அவரை ஏசினர்!! கிரேக்கர்களுக்கும் உரிமைகள் அளிக்கப்படவேண்டும், அவர்கள்தான் அதிகம், என்று அவர் எழுப்பிய குரல், திரித்தும் ஏறுமாறாகவும், எடுத்துச் சொல்லப்பட்டது, ஏகாதிபத்திய வாதிகளால். இதை எதிர்த்தார் மகாரியாஸ் — ஆண்டவனின் தூதர்கள், மக்கள்; அவர்களுடைய நலம் பேணுதலே மகேசன் சேவை என்று முன்வந்தார்—போர்க்கொடி ஏந்தினார்! சிறை என்றனர்! தண்டனை என்றனர்! தடிகளைக் காட்டினர்! துப்பாக்கிகளையும் தூக்கினர்!!

மொத்தம் இந்தக் கிளர்ச்சியின் காரணமாக **500**-பேருக்குமேல் செத்தனராம் — ஆனால், அந்த வீரர்களின் வேட்கை வீண்போகவில்லை! எந்த இலட்சியத்துக்காகப், போராடினார்களோ, அது வென்றது. கேலியும் சாபமும் அழிக்கப்பட்டது. மகாரியாஸை வலுவில் அழைத்தது பிரிட்டன்! வட்டமேசைக்கு வா, என்றது! கைகுலுக்கிற்று!!

அணைத்தும், கனைத்தும், தன் காரியத்தைச் சாதிக்கவில்லை, பிரிட்டன். மகாரியாஸ் வென்றார்; சைப்ரசுக்கு, குடியரசு உரிமை பெற்றுக்கொண்டு வெற்றி வீரராகத் திரும்பிவிட்டார்.

இந்த நிகழ்ச்சி, விடுதலை வீரர்களுக்கோர் விருந்தாகும். ஆரம்பத்தில், எறும்பாகவும், பிறகு கொசுவாகவும், பிறகு பசுவாகவும், தோன்றும் ஒரு விடுதலை இயக்கம், என்றாவது ஒருநாள், ஆதிக்கபுரியினர் தம் கண்களில் புலியாகத் தோன்றும், அந்தக் கிலி வந்துவிட்டால் நிச்சயம் விடுதலை கிடைக்கும் என்பதற்குச் சைப்ரசும் ஒரு சான்றாகிறது.

எங்கோ இருப்பது சைப்ரஸ்! என்றாலும், விடுதலை பெற்ற நாடுகளின் பட்டியலில் இடம்பெறும் அதனை வாழ்த்துகிறோம். கட்டுண்டோம், கடமை செய்வோம், காலம் வரும், உரிமை பெறுவோம்— என்கின்ற உறுதியுடனிருந்து, வெற்றிகண்ட, மகாரியாசுக்கும் நமது மரியாதைகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

★

‘ஹோம்லண்ட்’ ஏட்டுக்கு

வளர்பிறைகளின் காணிக்கை

கழகக் கொள்கைகளைப் பொதுவாக உலகுக்கும், குறிப்பாக இந்திய துணை கண்டத்துள்ளும், சிறப்பாக திராவிடத்தின் தமிழறியாப் பகுதிகளுக்கும் பரப்பும் நோக்குடன் பணியாற்றிவரும், நமது ஆங்கில வார ஏட்டுக்கு, கடந்த 21—2—59 அன்று அண்ணாமலை நகர் மாணவர்கள் மூலம் **பத்தாயிரம்** ரூபாய்கள் வழங்கப்பட்டன. நடைபெற்ற “**சந்திரமோகன்**” நாடகத்தில், சிதம்பரம் வட்டத் தோழர்களும், பொதுமக்களும், நிதியைத் தந்தபோது, எழுப்பிய கையொலி, மக்கள் மன்றம், நமது ஆங்கில ஏட்டின் 'வளர்ச்சிபால் கொண்டிருக்கும் அக்கரையைக் காட்டிற்று. நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமியும் அவரது குழுவினரும், சி. என். ஏ. யும் பங்கேற்று நடித்தனர், நாடகத்தில். பொதுச் செயலாளர் நாவலர் தலைமை தாங்கி, கழகத்துக்கு, “ஹோம்லண்ட்” பணியாற்றும் வகைகுறித்தும், அதன் வளர்ச்சியில் அக்கரை செலுத்தவேண்டிய அவசியம்பற்றியும் விளக்கினார். நன்றி தெறிவிக்கையில், “பத்தாயிரமல்ல பெரிது! பத்தாயிரக் கணக்கில் ஏடு, விற்பனையாகிறது—எனும் நிலையை உண்டாக்க வேண்டும். உங்களுடன், பல மொழியினரும், பல்வேறு மாணவர்களும் பழகுவார்கள். அவர்கள் ஊருக்கும், அவர்தம் இல்லத்துக்கும் ஏடு செல்லும் சூழ்நிலையை உருவாக்க, ஒவ்வொரு தோழரும் முயற்சிக்கவேண்டும். இதுபோன்ற ஆக்க வேலைகளில், ஓய்ந்த நேரத்தை மாணவர்கள் பயன்படுத்துவது வளரும் உரிமைக் குரலுக்குள்ள வலிவை எடுத்துக் காட்டுவதாகும்” என்று சி. என். ஏ. தெரிவித்துக்கொண்டார்.

தென்னவர் பொன்றுள்

கா. சு. அறிவுக்கொடி

"நாட்டின் சுபிட்சத்தில் ஈடுபடுங்கள்; நாடு நலமாகவும் சிறந்த முறையிலேயும் அமைந்தால்தான் நாட்டு மக்கள் முன்னேற்றம் காண முடியும்-நாடும் முன்னேற முடியும். ஐக்கிய இந்தியாவின் நலத்திலே நாம் அக்கறைகொள்ள வேண்டும். சுபிட்ச இந்தியாவை உருவாக்குவதே நமது நோக்கம் — நமது இலட்சியம். அதில் ஈடுபடுவதால்தான் புதுவாழ்வு காண முடியும். இந்தியா ஏழை நாடு, அயல்நாடுகளிடம் கையேந்தியே நாம் எப்போதும் எதையும் பெறவேண்டி—கடன்பட்டு வரவேண்டி இருக்கிறது. அந்த நிலைமைப் போக்கிடத்தான் பெரும் பெரும் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகிறது; ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் நீர் நிலையங்களையும் உருவாக்கி நமது வறுமைநாட்டை வளமுள்ளதாக்க முனைந்து வருகிறோம்"— என்று நேருமுதல் எல்லா அமைச்சர்களும் பேசிவிட்டுப் போய்விடுகிறார்கள், அத்தோடன்றி வடக்கு வளம் பேசுபவர்கள் இந்நாட்டின் இடக்கர்கள், உதவாக்கரைகள் என்றும் இகழ்ந்து பேசுகிறார்கள், நமமை இழுத்துவிடுகிறார்கள். உள்ளதைச் சொன்னால் உடம்பு எரிச்சலா என்று கேட்க வேண்டி இருக்கிறது. நேருவின் மேலே கண்ட கூற்றுக்கள் எல்லாம் தன் வடக்கு வளத்தைத் தான்சிறப்பிக்கப்பேசுகிறாரே தவிர தென்னாட்டுக்குச் சரியான திட்டங்கள் இல்லை என்பது ரூர்கேலாவின்—பிலாயின்—துர்காபூரின் தொழிற்சாலைகள் மேற்கோளாய் இருக்கின்றன. நமது அமைச்சர் பேசுகிறார், வடக்கிலே வளம் என்ற கூற்று வெறும் கேலிப் பேச்சு. தென்னாடு வடநாடு என்ற வேற்றுமை இல்லை, எல்லாம் ஏக இந்தியா என்ற முறையில்தான் நடைபெறுகிறது. ஓட்டு வாங்குவதற்கு—தங்களின் கட்சிக்கு ஆதரவு தேடுவதற்கு—அடுக்கு மொழியால் மக்களைக்கவர்வதற்குத்தான வடக்கு தெற்கு என்ற வரட்டு வாதம் வீண்--என்றார் நிதியமைச்சர். நமது நிதியமைச்சர் வலையிலே வந்து வசமாக சிக்கிவிட்டார், அமைச்சர் நம்பமுடியாது, அவர் நெஞ்சம் நம்பும், வடக்கில் உருவாகும் அனைத்தையும் அவர் நம்பாவிட்டாலும் மக்கள் நம்புவார்கள், வடக்கின் வளத்தை. கைப் புண்ணுக்குக் கண்ணாடி வேறு வேண்டுமா...? ரூர்கேலா, பிலாய், துர்காபூர், தொழிற்சாலைகள் மூட்டாளைக்கூட— வைத்தியக்காரனைக் கூட நம்பவைக்கும்...... 'தென்னகத்தில் சேலம்பகுதிகளில் இரும்பு தாராளமாகக் கிடைக்கும்; இங்கேயே உருக்குத் தொழிற்சாலையை துவங்க அரிய வாய்ப்புகள் இருக்கின்றன" — என்று 'டூங்கே' பொறியியல்எஞ்சினியர் கூறியிருக்கிறார் —இவர்மட்டுமல்ல; இதற்கு முன்வந்த பல கணிதத்துறை நிபுணர்களும் கூறிவிட்டார்கள்; நாமும் கூறி வந்தோம் பலகாலமாக. 'எதற்கும் டெல்லி எசமானர்களைக் கேட்கத்தான் வேண்டும்' என்றார்கள். அப்படி ஒன்றும் தொழிற்சாலைதுவக்கதிட்டமில்லை. இருமபுதானே எடுக்கவேண்டும்; இதோ என்றவாறே ரூர்கேலாவில், பிலாயில், துர்காபூரில்என்று இப்படி மூன்று தொழிற்சாலைகளின் சிறப்பைப் பட்டியல் மூலம் விவரிக்கிறார்கள் பாருங்கள்:

ரூர்கேலா உருக்கு ஆலை மேற்கு ஜெர்மெனியின் கூட்டுடன் வடக்கிலே ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. இந்த உருக்கு ஆலையைத் துவக்க ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்ட தொகை 128 கோடியில் முடிப்பதென்றும், துர்காபூர் தொழிற்சாலையை 131 கோடியில் முடிபபதென்றும், பிலாய்தொழிற்சாலையை 110 கோடியில் முடிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. அதன்பின் திருத்தப்பட்ட மதிப்பீடுகள் எவ்வளவு என்று பாருங்கள்: ரூர்கேலா 170 கோடியாகவும், பிலாய் 131 கோடியாகவும், துர்காபூர் 138 கோடியாகவும் திருத்தப்பட்டு இருக்கிறது. இந்தியாவில் மட்டுமின்றி, உலகத்திலேயே மிகச் சிறந்தது, ரூர்கேலா ஆலை என இரஷ்ய நிபுணர் கூறி இருக்கிறார் என்றால், வடக்கின் வளம் எப்படி இருக்கிறது என்பது புலனாகும். மேலும், பிலாய் தொழிற்சாலை எந்திர சாதனங்கள் ரூ. 63·1 கோடி மதிப்புள்ளவை. 10 லட்சம் டன் கச்சா உருக்கில் இருந்து 7.70,000 டன் உருக்குக் கட்டிகள் தண்டவாளங்கள் தயாரிக்கக் கூடியவை, 1,50,000 டன் தகடு அரைக்கும் துண்டும் வார்ப்படத்தொழிலுக்காக3,00,000 டன் இரும்பும், 2,00,000 ஸ்லீப்பர் தூண்களையும், 1.60.000டன் கரைகட்டுமான பகுதியையும் தயாரிக்கக் கூடியதாம். 64000 பேர் வேலை செய்கிறார்கள், 1700 டன் கனி இரும்பும், 1000 டன கோக்கரியும், 500 டன் சுண்ணாம்பும் உலையில் இடப்படுமாம், 4900 வீடுகள், தொழிலாளர்கள் வசிப்பதற்காகக் கட்டப்படுகிறதாம்.

ரூர்கேலா,—2 00 000 டன் கெட்டித் தகடும், 4 70 000 டன மெல்லிய தகடும், 130 டன் தாரும், இரியோசோட், நாப்தாலீன், பென்சால் போன்றவை உற்பத்தியாகுமாம், 5 80,000 டன நைட்ரோ லைம்ஸ் டோன் தயாரிக்கப்படுமாம். 670 எஞ்சினியரும், 63 000 தொழிலாளரும் தேவைப்படுகிறதாம்...!

துர்காபூர்,—இங்கிலாந்தின் தொழில் நிறுவனங்கள் கூட்டுறவுடன் 138 கோடி ரூபாயில் 7500 தொழிலாளர்கள் வசிக்கவும் மிகத் துரிதமாக நடைபெற்று வருகிறதாம்! "தொழில் சரித்திரத்தை மிஞ்சிவிட்டது இந்தியா! உலகில் மிகச் சிறந்தது!"... இதை எடுத்துக் கூறுகிறார்கள்......? என்றால் இதில் வடக்கின் வளத்தை அல்லாது பின்எதனைக் காட்டக்கூடும். இன்னும் எத்தனை திட்டங்கள் என்பதைப் பாருங்கள்: சேலம் பகுதியில் இரும்பு தூங்குகிறது. தோண்டி எடுத்துத்தொழில்படுத்துங்கள், பாக்ஸைட் பயன்படுத்தி அலுமினியத் தொழிலை ஆரம்பியுங்கள் — என்று கூறிவந்தோம். சரி, அப்படியே ஆகட்டும் செய்கிறோம் என்றார்கள். ஆனால் செயல்பட்டது டெல்லி எங்கே...? பீகாரில் உள்ள பொக்கரா என்ற இடத்தில் 200-கோடி ரூபாயில் பிரமாண்டமான முறையிலே இரும்புத் தொழிற்சாலையை உருவாக்கிவருகிறார்கள். இது என்ன அக்கிரமம்! சேலத்தைச் சொன்னால்........... 'ராஜ்ஹரா' எனும் இடத்தில் இரும்புக்கனி கிடைப்பதால் அதனை எடுத்துத் தொழிற்சாலையைத் துவக்க இருக்கிறோம்என்றார்கள். ஆமைவேகத்தில் முன்னேறி வரும் நெய்வேலித்திட்டம் பூர்த்தியாகவில்லை. நெய்வேலித் திட்டத்தைத் துரிதமாக நடத்தி நிலக்கரியை எடுங்கள் என்றால், அதற்குச் சரியானபடி விரைவில் எடுக்க முயற்சிக்காது 'கார்காளி' என்ற இடத்தில் நிலக்கரி தோண்டி வருகிறார்கள் துரிதமாய்; இன்னும் 'ஜாரிய'எனும் இடத்தில் நிலக்கரி தோண்ட முற்பட்டு இருக்கிறார்கள்; இன்னும் மத்திய பிரதேசத்தைச்சேர்ந்த 'கோர்பாவில்' இருந்தும், நிலக்கரி தோண்ட துரிதமான வேலையில் இறங்கி இருக்கிறார்கள்.

வடக்கே நான்காவது உருக்கு ஆலையை உருவாக்கப் போவதாக உருக்கு இலாகாச் செயலாளர் கூறுகிறார். அதுமட்டுமின்றி நாள் ஒன்றிற்கு 16-டன் செங்கற் படிவங்களையும், உருக்கு அச்சுக்களையும் உற்பத்தி செய்யும் உருக்கு உலை ஒன்றை மத்திய உருக்குத்துறை அமைச்சர் ஜாம்ஜெட்பூரில் துவக்கிவைத்தார். இதற்காகும் செலவு 27-இலட்ச ரூபாய். 11·9 ஏக்கரில் இந்த உலைத்தொழில் உருவாகி இருக்கிறது. ரூர்கேலாவில் இன்னும் வசதி செய்துதர வேண்டும் என ரூர்கேலாவில் உரத் தொழிற்சாலையையும் உருவாக்க திட்டம் தீட்டப்பட்டுள்ளது டில்லி. அதேபோல் பம்பாய் அருகே உள்ள டிராம்பேயில் 24 கோடி ரூபாயில் உரத்தொழிற்சாலையை உருவாக்க உறுதியாகிவிட்டதாம். இத்தாலி, பிரான்சு, அமெரிக்க நாட்டு நிறுவனங்கள் உரத் தொழில் நிர்வாகிகள் இதனை டிராம்பேவில் அமைத்துத்தர முடிவுசெய்துவிட்டனர், 90,000 டன் நைட்ரஜன் இறக்குமதியை மிச்சப்படுத்தித் தருமாம், 1963ல் இந்தத் திட்டத்தை முடிப்பதென்றும் கூறுகிறார்கள்.

உருக்கு ஆலைகள் உற்பத்தி செய்யப்படும் வகைகள்—உரத் தொழில்கள் உருவாகின்றன **வடக்கே!!**

இதோ, வடக்கு தெற்கு பேசுபவர்களுக்குத் தமிழ்நாட்டில் மின்சாரக் கருவிகள் உற்பத்திசெய்யும் தொழிற்சாலையை ஆவடியிலே ஆரம்பிக்கிறோம் என்று மேடை தவறாது முழங்கினார் நிதியமைச்சர். மின்சாரக் கருவி உற்பத்திசாலை ஆவடியில் ஆரம்பிப்பதைவிட, 'போபா'லுக்குப் போய்விடுவதே நல்லது என மின்சார உற்பத்தித் தொழிற்சாலை வடக்கிலே 'போபா'லுக்கு போய்விட்டது. தஞ்சைப் பகுதியில் சரியான நீர்ப்பாசனம் இல்லை. கிருஷ்ணா கோதாவரியை பயன்படுத்தினால்என்ன என்றோம். அதற்கொன்றும் இப்பொழுது அவசரமில்லை என்று விட்டுவிட்டார்கள். ஆனால்வடக்கிலே வளத்தைத் தரும் நீர்பாசனத் திட்டங்கள் உருவாகியதும்—உருவாக்கப்பட்டதும் கவனியுங்கள், சட்லெஜ் நதியில் பக்ரா என்ற இடத்தில் 174 கோடிரூபாய் செலவில்உருவாகிறது. வடக்கிலே இராகுட் நீர்த் திட்டம் வடக்கின் வளத்தைக் காட்டுவதோடுமட்டுமின்றி இந்தியாவின் முன்னேற்றம் "இது" என்று எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது பக்ராநங்கல்—இராகுட்,திட்டங்கள்; பம்பாய் மாநிலத்தில் 1,74,000 ஏகருக்குப் பாசன வசதி அளிக்கக்கூடிய மற்றொரு திட்டத்தை அமுலாக்கி அதற்கான ஆக்க வேலைகளில் ஈடுபட்டு வருகிறார்களாம். பம்பாய்க்கருகில் உள்ள தரோய் என்ற இடத்தில் சமர்மதி திட்டத்தின் கீழ் ஒரு அணை கட்டப்படுமாம். இதற்கு 98 இலட்சரூபாய்செலவாகிறதாம். 1957—1958ம் ஆண்டில் பம்பாய் சர்க்கார் பெரிய சிறிய நீர்ப்பாசன திட்டங்களுக்காக 800-இலட்ச ரூபாய் செலவுசெய்திருப்பதாகப் பம்பாய் நில நீர்ப்பாசன அமைச்சர் கூறினார். இவ்வளவு வசதிபம்பாய்க்குப்போதாதென்று பம்பாயைச் சேர்ந்த சபர்கஞ்தாவில் உருவாக்குகிறார்களாம். ஆத்மநதிபாலம் நீர்பாசன திட்டம்.

இத் திட்டத்தை 21,00,000 ரூபாய் செலவில் உருவாக்கப் போகிறார்களாம். வடக்கே ஒவ்வொரு தொழிற்சாலையும் நீர்ப்பாசனத் திட்டங்களும் அதி துரிதமாய் நிறைவேறி வருகிறது. வடக்கே உருவாகிறது 'சாக்ரபர்' நீர்பாசனத் திட்டம்! வடக்கே வளர்கிறது 'உகாய்' நீர்பாசனத் திட்டம், வடக்கின் வளத்தை மட்டுமல்ல உலகத்தின் வளத்திலேயே வடக்கு வளம் என மதிப்பிடக்கூடிய மாபெரும் திட்டம், உலகிலே மிகப்பெரிய நீளமான கால்வாய்த்திட்டம் உருவாகிறது. உலகத்திலேயே மிக உயரமான அணைக்கட்டுத் திட்டம் உருவாக்கப்போகிறார்கள் வடக்கிலே. வடக்கிலே கோடிகோடியாய்க் கொண்டு போய்கொட்டுகிறார்கள். தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது என்பது தெளிவாக்கப்படுகிறது. வடக்குத் திட்டம் செயல்பட இன்னும் மேற்கு ஜெர்மனி அரசின் உதவியோடும் ஒரு இரசாயனத்தொழிற்சாலைகளை 10 கோடி முதல் 15 கோடி வரை செலவு செய்யப் போகிறதாம் டெல்லி. இதுமட்டுமின்றி, இரசாயன பொருள்களை தயாரிப்பதற்காக 5 தொழிற்சாலையை நிறுவ டெல்லி திட்டமிட்டு ஆராயப்படுகிறதாம். இது மட்டுமின்றி நான்கு பட்டறை ஆராய்ச்சி நிலையம் துவக்க இருக்கிறார்களாம் வடக்கே! பட்டாலா, ஹௌரா, பம்பாய் போன்ற இடங்களில் நிர்மாணிக்க உலோகக்குழு முடிவு செய்துவிட்டதாம். இப்படியாக ஆயிரமாயிரம் தொழில்கள் திட்டங்கள் துவங்கி வருகிறது வடக்கிலே!! தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது. இப்படித் தென்னாடு தேய்வதை எடுத்துச் சொன்னால் இதோ பார், என ஆமை வேகத்தில் நடைபெறும் நெய்வேலியை காட்டுகிறார்கள் நமது அமைச்சர்கள்.

தமிழ்நாட்டிலே பெட்ரோல்...! தஞ்சை, தென்னார்க்காடு, இராமநாதபுரம், திருச்சி ஆகிய மாவட்டங்களிலே நிலவள ஆராய்ச்சியாளர்கள் நடத்திய சோதனைகளில் அங்கு எண்ணெய் ஊற்றுக்கள் இருக்கின்றன என்ற உண்மை வெளியாகியது. தென்னார்க்காடு கீழ்கரை பகுதியிலும், தஞ்சை மாவட்டத்தில் காவிரியாற்றின் பகுதியிலும் எண்ணெய் ஊற்றுச் சோதனை உண்மையானது. ஆனால் அங்கு பெட்ரோல் தோண்டும் முயற்சி மேற்கொள்ளப்படவில்லை; தமிழ் நாட்டில் பெட்ரோல் ஊற்று இருக்கிறது என்று கூடப் பேசப்படாது இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் 'லுனேஜ்' போன்ற இடத்தில் எண்ணெய்க் கிணறு தோண்டுகிறது டெல்லி ஏகாதிபத்தியம்!

இதேபோல் மாயவரம் காவிரிக்கரைப்பகுதியில்பெட்ரோல்கிடைக்கும்எனநிபுணர்கள் அறிவித்ததை மறுத்து, வடக்கே மேலும் மூன்று இடங்களில் பெட்ரோல் தோண்டும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. தெற்கு என்ற எண்ணத்தில்தான்புறக்கணிக்கப்படுகிறதே தவிர, வேறு இல்லை. கௌஹாத்தியில் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை துவக்கி இருக்கிறது டெல்லி.

வடக்கே 'ஜ்வாலாகி'யில் எரிபொருள் கண்டுபிடித்து அதற்கான வேலையைத் துவக்கி இருக்கிறது டெல்லி! எரிவெள்ளி ஏராளமாய் கிடைக்கிறது, எடுப்பாரற்று. அதேநேரத்திலே வடக்கே உத்திரப்பிரதேசத்தில் கொண்டு போய்க் கொட்டித் தள்ளுகிறது கோடிக்கணக்கில். வெள்ளைச் சுண்ணாம்பும், வெள்ளைக் களிமண்ணும் கிடைக்கிறது தமிழ்நாட்டில் மதுரையில்! அதனை மறுத்து வடக்கே 'நத்தினி' என்ற இடத்தில் சுண்ணாம்பு எடுக்கும் தொழிற்சாலை துவங்குகிறது டெல்லி. மாக்கைசட்டும் மாங்கனீசமும் மலிந்து கிடக்கிறது தென்னகத்து மண்ணிலே. தேரியம் தேவையான அளவு தேங்கிக்கிடக்கிறது. பாக்சைட் பரந்து கிடக்கிறது; கரூர் வெள்ள கோவில் அருகே வைரக்கட்டி; மதுரை அருகே வெள்ளைக்கட்டிகல். வெள்ளைச் சுண்ணாம்பு, வெள்ளைக் களிமண், பழுப்பு நிலக்கரி முதலிய மூலப்பொருள்கள் முடங்கிக்கிடக்கின்றன. தமிழ்நாட்டுமண்ணிலே தவழ்ந்து விளையாடுகிறது! ஆனால் இதனை எடுத்துக்கூறும் தகுதியற்ற அமைச்சர்களாய் இருக்கிறார்கள் நமது அமைச்சர்கள். தமிழ்நாட்டிலே ஒருசர்வகலாசாலையைக்கூடஏற்றுநடத்த மறுக்கிறது டெல்லி! ஆனால் அதே நேரத்திலே வடக்கே 5 சர்வகலாசாலையை ஏற்று நடத்துகிறது டெல்லி!! கல்விக்குக்கூட கட்டுப்பாடா...? வளவனூரில் சர்க்கரை ஆலையை நடத்தத்தனியார் ஒருவருக்கு டெல்லி ஏகாதிபத்தியம் அனுமதியளிக்கமறுத்துவிட்டது. அதே நேரத்தில் பம்பாய் மாநிலத்தில் சர்க்கரை ஆலையை நடத்துவதற்காக ஒருவருக்கு அனுமதியளித்து இருக்கிறது டெல்லி!! ஈழத்தில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட — சொத்து 30 கோடிக்கும் மேல் இழந்த தமிழ் அகதிகளுக்கு உதவி கிடையாது என்று கைவிரித்துவிட்டது டெல்லி ஏகாதிபத்தியம். அதே நேரத்தில் தன் இனத்தான் என்ற முறையிலே வட அகதிகளுக்கு ரூ. 345 கோடி டெல்லியின் பாட்டன் வீட்டுச் சொத்தாக எண்ணி அள்ளித் தந்திருக்கிறது. என்ன கொடுமை! என்ன அநீதி! தொழில் துறையில் ஆக்கவேலைகளில்தான் இப்படி என்றால், தனியாருக்கும் வடக்கு வாடைதானா? சித்தரஞ்சன் ரயில் எஞ்சின் தொழிற்சாலை வடக்கிலே! சிந்திரி உரஉற்பத்தித் தொழிற்சாலை வடக்கிலே...! டேராடூன் 'வன ஆராய்ச்சி' வடக்கிலே! தோல் பயிற்சிக்கூடம் வடக்கிலே!

எண்ணெய்வள ஆராய்ச்சி நிலையம் வடக்கின் வளத்தைக் காட்டுகிறது. பிரமிக்கத்தக்க எஞ்சினீயரிங் பல்கலைக்கழகம் வடக்கு வளத்தைக் கூறுகிறது. வடக்கில் உருவாகப்போகும் — உலகத்திலேயே மிக உயரமான அணைக்கட்டுத்திட்டம்தென்னாடு புறக்கணிக்கப்படுவதை எடுத்துக்கூறுகிறது. வடக்கிலே உருவாகப்போகும் உலகத்திலேயே மிக நீளமான கால்வாய்த் திட்டம் தென்னாடு புறக்கணிக்கப்படுவதைக் காட்டுகிறது. கண்துடைப்புக்காக "ஈழத் தமிழருக்கு ஏதாவது தொழிற்சாலை அமைத்துத்தருவோம்" என்பதும், அதே நேரத்தில் வட அகதிகளுக்கு வடக்கே 80,000சதுரமைலில் நிலப்பரப்பில் ரூ. 100-கோடி செலவில் அகதிகளுக்கு புது வாழ்வு என்ற பெயரில் தண்டகாரண்யத் திட்டம் அமுலாகிவிட்டது! வடக்கிலே கனரக இயந்திர உற்பத்தியும் புகைவண்டி எந்திர உற்பத்தியும் இலட்சிய எல்லையை மீறிவிட்டது! 10500 தொழிற்சாலைகள் பம்பாய் மாவட்டத்தில். தென்னாடு எந்த வகையிலும் இதில் 10ல் 1பங்கைக்கூடப் பெற முடியவில்லை. டெல்லி ஏகாதிபத்தியம் இந்த நாட்டை ஆளும்வரை தென்னாடு முன்னேற முடியாது. இங்கே வாழ வழி இல்லை! இங்கே வேலையில்லாத் திண்டாட்டம்! இங்கேதான் வறுமையின் உச்சநிலை! இங்கேதான் வறுமையில் புழுப்போன்று துடிப்போர்! காய்ந்த எண்ணெய்ப் பசையற்ற தலை! ஒட்டிய வயிறுடன் இந்நாட்டு மன்னர்கள்! வடநாட்டைவிடத் தென்னாடு எந்த அளவில் முன்னேறி இருக்கின்றது என்றால், வறுமையின்காரணமாய்த் தாயும் குழந்தையும் தற்கொலை என்ற செய்திதான் தென்னாட்டில் அதிக அளவு முன்னேறிவிட்டது என்பதைத்தவிர, வேறு இல்லை. வடக்கு வளரவில்லை-வீண் வாட்டுவாதம் என்றார்கள் அமைச்சர்கள். வடக்கு வளரும் கதையை எடுத்துச் சொன்னோம். தென்னாட்டில் அதற்குரிய பொருள்

(9-ம் பக்கம் பார்க்க)

மனித வாழ்க்கையிலும் வசந்தம், கோடை, இலையுதிர்காலம், குளிர்காலம் ஆகிய நான்கு பருவங்கள் உண்டு. இந்த நான்கு பருவங்களும் மனதைச்சுற்றியே வளருகின்றன. வசந்தத்தில் மனிதன் இன்ப வெறியோடு எதையும் ருசிபார்க்கிறான், அழகின் ரசத்தை அள்ளிப் பருகுகின்றான்; கோடையில் வசந்தத்தில் கனிந்த பழங்களைத் தின்று இன்புறுகிறான்; இலையுதிர் காலத்தில் சிந்தனையில் ஆழ்ந்து, மௌனியாகி நிற்கின்றான்; பனி காலத்தில் மெய் சுருங்கி மனம் சுருங்கி மறைகிறான்.

ஐம்பெருங் காட்சிகள்

காட்சி 1

[ஒரு என். ஜி. ஓ. வீடு. அவர் வீட்டினுள் நுழைகிறார். மனைவி வரவேற்கிறாள்.]

மனைவி:- வந்துட்டீங்களா.

கணவன்:- வராமத் தொலைஞ்சுட்டாக்கூடத் தேவலை. பெண்டாட்டி, பிள்ளை என்ன வேண்டியிருக்கு. போடி போ. பல்லைக் காமிச்சுட்டு நிற்கிறியே.

[அப்பா என்று கூறிக்கொண்டே குழந்தை வருகிறது. கன்னத்தில் பளார் என்று ஒரு அறை. அழுது கொண்டே போகிறது.]

மனைவி:- உங்க கோபத்தை குழந்தைமேல் ஏன் காட்டுறீங்க.

கணவன்:- ஏன் உனக்கும் ஏதாவது வேணுமா.

மனைவி:- (கோபமாக) உம்... கொடுங்க. என் தலைவிதி! அனுபவிக்கிறேன். உங்களைக் கட்டிக்கிட்டு நான் கண்டது இதுதான். அப்பவே எங்க மாமா சொன்னார். இந்த என். ஜி. ஓ.விற்குப் பெண்கொடுக்காதேன்னு. எங்கப்பா என்னமோ அரண்மனை உத்யோகம்னு இப்படித் தள்ளிட்டாரு. (கண்களை கசக்குதல்.)

கணவன்:- சரி சரி. இதுதான் வழக்கமான ஒப்பாரியாச்சே. புதிசா ஏதாச்சும் சொல்லி அழேன். இப்போ சாப்பிடலாமா என்ன?

மனைவி:- (பரிமாறிக்கொண்டே) ஏங்க காலையிலே என்னமோ முதலமைச்சர் வராரு; அள்ளிக் கொடுக்கப்போறாருன்னு குதிச்சிக்கிட்டுப்போனீங்களே, என்ன கொடுத்தாரு.

கணவன்:- அதைத்தான் உங்கிட்டேயும் குழந்தைக் கிட்டேயும் கொடுத்துட்டேனே.

மனைவி:- அவர் என்ன எரிஞ்சா விழுந்தார்.

கணவன்:- புலிபோல் பாய்ந்தார். சிங்கம்போல் கர்ச்சித்தார். கடைசியில் மாடுபோல் முட்டித் தள்ளிவிட்டார்.

மனைவி:- ஏன் நீங்கள் ஏதாவது அவரிடம் விளையாட்டுக் காண்பித்தீர்களா?

கணவன்:- ஒன்றுமில்லை. எங்கள் தலைவர் பேசும்போது ஐந்து ரூபாய் அதிகமாகப் பஞ்சப்படி

அறிவு ஒளி

கொடுத்ததாக மனைவியிடம் சொன்னால், வெட்கமாயில்லை என்று கூறினாளாம். முதல் அமைச்சருக்குக் கோபம் வந்துவிட்டது.

[மனைவி விழுந்து விழுந்து சிரிக்கிறாள்.]

கணவன்:- கொஞ்சம் சொல்லிவிட்டுத்தான் சிரியேன்.

மனைவி:- பின்னே என்னங்க, அவருகிட்டப்போயி குடும்பக் கதை பேசலாமா. 'என்னடா நம்ப ஆயிரம் ரூபாய் வாங்கிக்கிட்டு ஒரு குடும்பம் வச்சுக்க முடியல்லை, இந்தப்பசங்க ஐம்பது வாங்கிக்கிட்டு குடும்பம் நடத்துறாங்களேன்னு' பொறாமையினாலே எரிஞ்சு விழுந்தது நியாயந்தானே.

[திரை]

காட்சி 2

[சென்னையில் ஒரு மண்டலக் காங்கிரஸ் அலுவலகம். சுப்புவும், தியாகிராசுவும்.

தியாகி:- என்ன சுப்பண்ணேசி பார்த்திங்களா நம்ம சீப், இந்த என். ஜீ. ஓ.க்களை வெளுத்துட்டார்.

சுப்பு:- (கோபமாக) என்னய்யா அப்படி வெளுத்துட்டார். மனுஷன் காரியத்தைக் குட்டிச்சுவராக்கிட்டாரு.

தியாகி:- ஒன்றும் புரியலையே.

சுப்பு:- நீர் இன்னும் உப்பு சத்யாக்கிரக காலத்திலேயே இரும். நம்ம வார்டிலே என். ஜி. ஓ.க்கள் அதிகம். இப்போ கொடுத்த அஞ்சு ரூபாயைச் சொல்லி நான் கௌன்சிலர் ஆயிடலாம் என்றுபார்த்தேன். கடைசியிலே என் ஆசை நிராசையாப் போச்சு.

தி:- இப்பெல்லாம் சீப்பின் பேச்சு ஒரு மாதிரியாத்தான் இருக்கு! அன்று என் தம்பி வீட்டுவரியைக் குறைக்கச் சிபாரிசுக்குப் போனேன். மனுஷன் என்ன சொன்னார் தெரியுமா. 'ஏனய்யா நீயெல்லாம் கட்சியை விட்டு ஒழியமாட்டேங்கிறேயே' என்றார். எல்லாம் நம் தலைவிதி.

சுப்பு:- மெள்ளப் பேசும். நமக்கும் தான் இதைவிட்டா வேறு பிழைப்பில்லை. என்ன செய்யறது, வரட்டுமா.

[திரை]

காட்சி 3

[கிராமம் உழவனும், விடுமுறைக்கு வந்த மாணவனும்.]

உழவன்:- தம்பி பேப்பர்லே என்ன போட்டிருக்கு.

மாணவன்:- நீ யோகக்காரன் அண்ணே.

உழ:- விஷயத்தைச் சொல்லு.

மாண:- நம்ம முதலமைச்சர் சர்க்கார் ஊழியர் கூட்டத்திலே பேசும்போது 'வயலிலே உழவன் கஷ்டப்படுகிறான். அவனுக்குச் சரியான கூலி கிடைக்கலை. சர்க்கார் சிப்பந்திகள் அதிகக்கூலி கேட்கிறது தப்பு' அப்படின்னு சொல்லுயிருக்கார்.

உழ:- அப்புறம்

மாண:- கிராமத்துக்கு லைட் போடணும். அதனாலே, சம்பளம் அதிக

மாகக் கொடுக்க முடியாதுன்னு சொல்லிட்டாரு

உழ:- நீ என்ன சொல்கிறாய் தம்பி!

மாண:- உங்கபேச்சிலே இவ்வளவு இரக்கம் உள்ள முதலமைச்சரா இருக்காரேன்னு சந்தோஷப் படறேன்.

உழ:- போ தம்பி போ. எவனோ எப்பவோ சொன்னாரு "உழவன் கணக்கு பாத்தா உழவு கோல்தான மிஞ்சும்னு" அது அப்படியே நிலைச்சுப் போயிட்டதே. முன்பெல்லாம் தம்பி, கஷ்டப்பட்டாலும் ஒரு அமைதி, நிம்மதி இருந்தது. இப்போ எங்களுக்கு நன்மை செய்யறேன்னு புது புதுச் சட்டம் போட்டுக் கடைசியிலே அடிதடிதான் மிச்சம். இணைத்து லோன், உரலோன், மாட்டு லோன் என்னென்னமோ சொல்றுங்க. எங்க கைக்கு எதுவும் வரமாட்டேங்கிறது. எங்க நிலை அப்படியேதான இருக்கு. பேச்சு மட்டும் உழவனுக்கு அதைச் செஞ்சேன, இதைச் செஞ்சேன்னு சொல்லிடறுங்க.

மாண:- விதைநெல்கூடக் கொடுப் பார்களாமே.

உழ:- ஆமா, கொடுக்கிறுங்க. யாருக்கு? உனக்குத் தெரியுமில்லே. நானும் உங்க அப்பாவும் ஒருவாரம் நடந்து செத்தோம். கிடச்சுதா? தெற்குத் தெரு பாணர் நோகாம விதை நெல் இரண்டு மூட்டை வாங்கி வந்து சாப்பாட்டுக்கு வச்சுகிட்டாரு.

மாண:- யாரு காங்கிரஸ்காரர் பாணரா? அவருக்கு மட்டும் எப படிக் கிடைச்சுது.

உழ:- நீ அறியாப்பிள்ளை, பேசாப் பாடத்தைப் படி. எங்க தலையெழுத்து இப்படியாச்சு. போயிட்டு வா தம்பி.

[திரை]

காட்சி 4

[தெருத்திண்ணை. கபிலரும், மருதனரும்.]

மருதனர்:- என்ன கபிலரே செய்தித்தாள் கண்டீரா. நம் முதல் அமைச்சர் என். ஜி. ஓ.க்களைக் கண்டு சினந்து பாய்ந்திருக்கிறார்.

கபிலர்:- நானே மாநாட்டுக்குப் போயிருந்தேன். இது எல்லாம் இந்த என். ஜி. ஓ.க்களுக்கு வேண்டும்!

மரு:- உங்கள் குதர்க்க வாதத்தை ஆரம்பித்துவிட்டீரா?

கபி:- பின் என்னய்யா. இந்த என். ஜி. ஓ.க்கள் முதலமைச்சரை வைத்துக்கொண்டு இனிய தமிழில், அடுக்கு மொழிகள் மிளிர, அலங்கார நடையில் குறைகளை எடுத்தியம்புவது தகுமோ?

மரு:- அழகு தமிழில் பேசினால் என்ன?

கபி:- முதலமைச்சர் இவர்கள் எல்லோரும் கழகமென்று எண்ணி வெகுண்டெழுந்தார். நியாயந்தானே.

மரு:- உம்மை அடுத்த ஐ. நா. சபைக்குத்தான் அனுப்ப வேண்டும், வருகிறேன்.

[திரை]

காட்சி 5

[தெருக்கோடி ரிக்ஷா ஸ்டாண்டு. சட்டிப்பண்டாரமும், மட்டிப்பண்டாரமும் உரையாடல்.]

சட்டி:- என்ன சுவாமிகாள்! பேப்பர்லே என்ன போட்டிருக்கு.

மட்டி:- பத்தொன்பது வயது மங்கையைப் பார்த்து வாலிபன் ஒருவன் சீட்டி அடித்தானும்.

சட்டி:- தள்ளு குப்பையை. அரசியல் என்ன சொல்லுங்கறேன்.

மட்டி:- குருச்சேவ் அழைப்பை மாக்மில்லன் ஏற்றுக்கொண்டாராம்.

சட்டி:- அட, உள்நாட்டு அரசியல்!

மட்டி:- டில்லி இரயில் நிலையத்தில் இந்திரா காந்திக்கு தடபுடலான வரவேற்பாம். அவர் சிகப்புக் கலரில் மஞ்சள் பார்டர் சேலையும் ஊதா ஜாக்கட்டும் போட்டிருந்தாராம்.

சட்டி:- உம்மோடு பெரிய இழவாப் போச்சு. தமிழ் நாட்டுச் சேதி இருந்தாச் சொல்லய்யா.

மட்டி:- படிக்கிறேன் கேளும். "சர்க்கார் சிப்பந்திகள் சம்பளம் போதவில்லை என்று கேட்டதற்கு முதலமைச்சர் சூடு"

சட்டி:- நிறுத்தும். "சிவ சிவ" இந்த மாநிடப் பசங்களுக்கு இதே வேலையாப்போச்சு. சம்பளம் போதலை, கூலி போதலை, இதுதானா? அதோ ரிக்ஷாக்காரன் வரான், பேப்பரைக் கொடுத்துட்டு வாரும் போகலாம்.

*

[திரை]

7-ம் பக்கத் தொடர்ச்சி

வளங்கள் இல்லை என்றார்கள். தென்னாட்டுச் செல்வங்களை எடுத்துக் கூறிவருகிறோம். டெல்லி எசமானர்களைத் தட்டிக்கேட்க தகுதியற்றவர்களாய்த்தான் இருக்கிறார்கள். தென்னாட்டிலே வசதியும் வளமும இருக்கிறது. அதனை வளப்படுத்தினால் இந்தியப் பொருளாதாரத் துறையில் கணிசமான வெற்றிகாணமுடியும். தென்னவர்க்கு வேலை இல்லை என்ற குரலைக் கேட்கமுடியாது. வறுமையில் வாடுவோர் — சிக்கிச் சீரழிவோர் இருக்க முடியாது—ஆனல் இப்படி எழுதிவிட்டால் பேசிவிட்டால் போதாது. வடக்கு வளத்தை தக்காட்டித்தெற்குப்புறக்கணிக்கப்படுவதைப்புகட்டிவிட்டால்மட்டும் நமது தகுதியற்ற — தட்டிக் கேட்கத்துணிவில்லாத அமைச்சர்களாலோ, டெல்லியாலோ—இந்த நிலையை போக்கிவிட முடியாது. அதற்கு ஒரே ஒரு வழிதான். அதுதான் டெல்லி சர்வாதிகாரம் இந்தத்தென்னாட்டைப்பிடித்திருக்கும்வரை இந்த நிலையை ஒழித்துவிடமுடியாது. தென்னகவளத்தை பெருக்கிவிட முடியாது என்பது வீண் கூற்றல்ல. வடநாட்டு ஏகாதிபத்தியத்தை ஒழித்துக் கட்டுமவரை தென்னவர் அடிமைகள்தான். தென்னாடு வடநாட்டு ஏகாதிபத்தியத்தோடு பிணைந்திருக்கும்வரை ஏழைகளின் துயரக் கண்ணீரைத் துடைக்க முடியாது என்பது உறுதி. வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் விலங்கை ஒடித்தே தீரவேண்டும். அதுவரை தென்னாட்டிற்கு வாழ்வோ வளமோ இல்லை. வடநாட்டு ஏகாதிபத்தியம் சுரண்டிக்கொண்டும் — அடிமைப்படுத்திக் கொண்டும் இருக்கும்வரை தென்னாட்டுச் செல்வவளங்கள் தூங்கிக் கொண்டுதான் இருக்க முடியும்— எந்தத் தொழிலும் ஏற்பட ஏதுவாகாது. தெற்கை ஓரவஞ்சனை செய்யும் வடக்கின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடக் கூடிய ஆற்றலையும்—திறமையையும் நமது நரம்புகளிலே முறுக்கேற்றிக்கொள்வோம். வடநாட்டு அடிமைப்பிடியிலே வாழ மாட்டோம் என்பதை நமது இதயங்களிலே பதித்துக்கொள்வோமாக.

வாழ்வா? சாவா?

இரா. வளையாபதி

அந்தப்புரத்தில் சுவரோடு சுவராய்ச் சாய்ந்து நின்றிருந்தாள் அவள். மனத்தின் துன்ப அலை முகத்தில் தவழ்ந்தது. வேதனையின் வடிவத்தை விழிகள் நேராக வடித்துக் காட்டின. வழிந்த கண்ணீர் முத்துக்கள் அவள் எண்ணத்தைப்போல ஒவ்வொன்றாக உடைந்து ஓடின!

'இத்தாலி நாட்டு ரோமர் இனத்தின் இரும்புக் கரங்களில் இங்கிலாந்து சிக்கி இன்னல்படுகிறதே' என்று எண்ணி வருந்தினாள். இதயம் பிழிபட்டதைப்போலத் துடித்தாள். அடிமைத் தளையை அறுத்தெறிய வழியின்றித் தன்னாடு அடங்கி வாழ்கிறதே என்பதற்காகமட்டும் அவள் கலங்கவில்லை—கண்ணீர் விடவில்லை; நிலத்திற்குரியவன் தனக்கு நெஞ்சமிருப்பதையே மறந்து நேற்றுவரையில் எங்கேயோ இருந்துவிட்டு வந்திருக்கும் ரோமருக்கு முன்னால் விழுந்து கிடக்கிறானே — என்பதை நினைக்கும்பொழுது அவள் நெஞ்சம் புண்ணானது; நெருப்பிலிட்ட புழுவானது!

வந்தவனுக்கு வால்பிடித்து வாழும் தன் வம்சத்தவனுக்கு எப்படி அறிவூட்டுவது? வஞ்சகர் தம் பிடியில் வதைபடும் தாயகத்தை வளமார் பூமியாக்க யாது செய்வது? இதுபோன்ற கேள்விக் குறிகளை மனத்தின் முன்னால் நிறுத்திவைத்து விடை காணத் துடித்தாள். அவள் மனம் பதில் சொல்லச் சக்தியற்று நெளிந்தது —புரண்டது! பிறகு ஊமையானது! உள்ளம் வெதும்பி நின்றாள் அவள்!

அப்பொழுது அங்குவந்த ஒரு ஆங்கில வீரன் வணக்கம் செலுத்திவிட்டு, அவளிடம் ஒரு காகிதச் சுருளைத் தந்தான். விரித்துப் படித்தாள். அவள் விழிகள் விரிந்தன. வேதனையால் எரிந்தன!

ரோமர்களின் அட்டகாசத்தால் ஏற்பட்ட நாசச் செயல்கள். அரை இலட்சம் ஏக்கருள்ள கோதுமை வயல்கள் பாழ்படுத்தப்பட்டன! ஐந்நூறுக்கு மேற்பட்ட ஆங்கில மாதுகள் கற்பழிக்கப்பட்டனர்.

அதை எதிர்த்துப் போராடிய ஆயிரத்து இருநூறு ஆங்கிலேய வீரர்களின் உடல்கள் அம்புகளால் கிழித்தெறியப்பட்டன!"

அவள் கண்கள் குளமாயின! மனம் களமாயிற்று! கையைப் பிசைந்துகொண்டு நடை போட்டாள். பிறகு நிமிர்ந்து நின்றாள். அந்த வீரனுக்கருகில் சென்றாள்.

"நமது ஐஸ்கிப் பகுதியில் இருக்கும் அரசியல் தலைவர்கள் அத்தனை பேர்களையும் நாளைக் காலை இங்கு அழைத்துவா!" என்றாள்! சென்றான் அவன்! அவள் நின்றாள் சிலையாய்!

அவள்தான் பொடிஷியா! இங்கிலாந்தில் 'நார்போக்' என்று அழைக்கப்படும் 'ஐஸ்கி' பகுதிக்கு அவள்தான் அரசி. மற்றப் பகுதிகளனைத்தும் ரோமர்களின் ஆட்சிக்கு அடிமைபட்டுக் கிடந்தது.

ஆதிக்கவெறி கொண்ட ரோமர்கள் ஆங்கிலேயர்களை ஆடுகளாக நடத்தினர். ஆங்கிலேயப் பெண்களை அடித்தும் அல்லற்படுத்தியும், அவர்களின் மானத்தைப் பறித்தும் ஆட்சிசெய்து வந்தனர்.

அப்பொழுது இங்கிலாந்தின் அரசபீடத்தில் அமர்ந்திருந்தவன் சுடோனியஸ் பாலினஸ் என்ற ரோம்நாட்டுப் பெருமகன். வெறிச் செயலை விளையாட்டாகக் கருதியவன். பெண்களைப் பூப்பந்துகளாகச் சூறையாடியவன்.

அப்படிப்பட்ட அவனுக்கு ஒரே ஒரு ஆசை இருந்தது! ஐஸ்கி பகுதியையும் பிடித்து இணைத்து 'ஏக இங்கிலாந்தாக' ஏற்படுத்தினால்தான் மனம் சாந்தியடையும் என்று எண்ணிவந்தான். அதை அவ்வப்போது செயல்படுத்தியும் பார்த்தான். அந்தச் செயலின் விளைவு ஐஸ்கிப் பகுதியில் ஆயிரமாயிரம் வீரர்கள் மாண்டனர். அரிவையர் அநேகர் கற்பழிக்கப்பட்டனர்.

ஆனாலும் உள்ளத்தை வளைய விடவில்லை—பொடிஷியா! உறுதியாகவே இருந்தாள்!

"ஐஸ்கிப் பகுதி தனியாக வாழ்கிறது! தனிக்கொடி பறக்கிறது! இதோடுமட்டும் நம் இலட்சியம் முடிவடைந்துவிடவில்லை! இங்கிலாந்து பூராவும் ரோமரின் ஆட்சியிலிருந்து விடுபடவேண்டும்! முழு இங்கிலாந்தும் ஆங்கிலேயரின் கைக்கு என்றைக்கு வருகிறதோ —சொந்த நாட்டை வந்தவன் ஆளும் நிலைமை என்று அழிக்கப்படுகிறதோ, அன்றுதான் நம்

இலட்சியம் முடிவடைகிறது! பூர்த்தியாகிறது" என்ற அசையாத கொள்கையைத் தன் மனத்தில் இருத்திவைத்திருந்தாள் பொடீஷியா! இந்த அரும் பெரும் பணியில் ஈடுபடத் தம்இனத்தவர் ஒரு சேர வரவேண்டுமே என்று ஏங்கிக்கொண்டிருந்தாள்! அந்த ஏக்கம் இன்னும் விரிவானதே யொழியக் குறையவில்லை!

ஐஸ்னிப் பகுதியில் உள்ள அரசியல் தலைவர்கள் அனைவரும் ஆச்சரியப்பட்டனர். அரண்மனையில் உலவும் அரசி—அவதியுறும் ஏழைகளின் அழுகுரலைக் கேட்க விரும்பாதவள்—அவர்களின் அல்லலைப் போக்கிட அவர்களோடு வாழும் அரசியல் தலைவர்களைக் காண்பதற்கு விரும்புகிருள் என்றால் ஆச்சரியம் பிறக்கத்தானே செய்யும்?

தலைவர்கள் கூடினர்! அந்த அறிஞர் குழுவுக்குத் தலைமை வகித்தாள் பொடீஷியா!

"நாம் யார்? நமது வரலாறு என்ன! என்பதை நாமெல்லாம் தெரிந்துகொள்ளவேண்டும்! அதைப் பொறுத்துத்தான் நம் பணியை நாம் துவக்கவேண்டும்! அப்படி ஏற்படப் போகிற பணி சாதாரணமானதாக — விரைவில் முடியக் கூடியதாக இருக்காது என்று எண்ணுகிறேன்! நம் காலத்திலேயே நாம் செய்கிற அந்தச் செயலுக்கு இப்பொழுது நன்மை கிடைக்காது! நாமும் எதிர்பார்க்கக் கூடாது! எதிர்கால நம் சந்ததி இன்புற்றிருக்க— அவர்களுக்கு இல்லாமை இல்லாமல் இருக்க இப்பொழுதே செயல்பட வேண்டும் நாம்! அதற்காக ஆதிக்க வெறியர்கள் பொருள் கேட்டால் உடல் கொடுப்போம்! பலி கேட்டால் உயிர் தருவோம்! இதுபற்றி உங்கள் எண்ணத்தைக் கூறுங்கள்! வலிமையைத் தாருங்கள்!"

பொடீஷியாவின் இந்தப் பேச்சு அங்குள்ள அரசியல் வாதிகளுக்கெல்லாம் பூரிப்பைத் தந்தது! ஒருவரை ஒருவர் விழியைப் பெரிதாக்கிக் கொண்டு பார்த்தனர்!

பொடீஷியா உலவுவது மாளிகையே ஆனாலும், அவள் இதயத்தில் உறங்குவது நாட்டிற்குத் தேவையான நல்ல கருத்து! பழரசத்தைக் குடித்து —பன்னீரிலே குளித்து பவளக் கட்டிலிலே படுத்துக்களித்தாலும், அவள் இதயத்தில் குடிகொண்டிருப்பது நாட்டுப் பற்று! விழிகள் காண்பவை வேதனைபடும் மக்களின் அழுகுரல்—கண்ணீர் வெள்ளம்! என்பதை அரசியல் அறிஞர்கள்— ஆய்ந்து பார்க்கும் திறம் பெற்றோர் — எதையும் அளந்து பார்த்து முடிவுகூறும் நெஞ்சுரங் கொண்ட ஆசிரியர்கள் புரிந்துகொண்டனர்!

எல்லோர் முகத்திலும் புன்னகை தவழுவதைக்கண்ட பொடீஷியா மன நிம்மதி அடைந்தாள். அதை வெளிக்காட்டிற்று அவள்விட்ட பெருமூச்சு!

மீண்டும் பேசினாள்!

"நாம் யார்? ஆங்கிலேயர்கள்! நமது நாடு எது? இங்கிலாந்து! ஆனால் நம்மையும் நம் நாட்டையும் அடிமைப்படுத்தி ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்பவர்கள் யார்? இத்தாலிநாட்டு ரோமர்கள்! இவைகளுக்கெல்லாம் எளிதாகப் பதில் தெரிந்துகொண்டோம்! இவைகளெல்லாம் சென்றுபோன நிகழ்ச்சிகள்! எல்லோருக்கும் தெரியக்கூடிய பதில்கள்! ஆனால் ......இனிமேல் காலம் நம்முன் நிறுத்திவைத்திருக்கும் கேள்வி என்ன?

ஆதிக்கப்புரியினரின் காலிலே சிக்கியிருக்கும் நம் நாடு விடுதலை பெறுவதற்கான வழிவகை யாது? இதற்கான நல்ல விடையைக் கண்டுபிடித்தாகவேண்டும்! அந்தப் பொறுப்பை நீங்களும் நானும் ஏற்றுச் செயலாற்ற முற்பட வேண்டும்!"

அவள் பேச்சு அங்குள்ளோர் இதயத்தை இழுத்தது! இனித்தது அவள் கூறிய அறிவுரை!

ஒருவர் எழுந்தார். அவர் மிகப் பெரிய அரசியல்வாதி! மக்களின் இதயத்தை இல்லமாகப் பெற்றவர்!

"ரோமரின் ஆணவ ஆதிக்கத்தால் நம் இனம் அழிக்கப்படுகிறது! தன்னினத்திற்கு இன்னல் நேர்ந்தால் அதை மனிதஉணர்ச்சியுள்ளவன் — நாட்டின்பால் பற்றுள்ளம் கொண்டவன் சகித்துக் கொள்ளமாட்டான்! பதைத்து எழுவான்! துடித்துக் கிளம்புவான்! அதைப் பொறுத்தவரையில் நாங்களனைவரும் உங்கள் கரத்திற்கு வலிவூட்டுகிறோம்! ரோமரை ஒட்டுவதற்காகத் தீட்டப்படும் திட்டம் செயல்பட— அதனால் வெற்றி பெற நாங்கள் முழு மூச்சுடன் ஒத்துழைக்கிறோம்!"

அவர் கூறியதை அங்குள்ளோர் அனைவரும் ஆமோதித்தனர். தாயகம் விடுதலை பெறப்போகும் காட்சியை மனத்தில் திரையிட்டுப் பார்த்த பொடீஷியா மகிழ்ச்சிப் புனலில் நீராடினாள்!

இவ்வாறு தென்பகுதி மக்களையெல்லாம் தன் பக்கம் இழுத்துக் கொண்டாள்! ஒவ்வொருவருடைய உள்ளமும் அவளுடைய உருவத்தைச் செதுக்கிப்பதித்துப் பெருமை யடைந்தது! உறங்கிக் கிடந்தவர்கள் விழிப்புற்று எழுந்தனர்! இனப்பற்றுக்கொண்டனர்! எழுச்சி பெற்று நடந்தனர்! இருளகற்றும் பணியைச் செய்திடக் கிளம்பினர்!

ரோமரைக் கண்டால் காதம் பல ஓடுபவர்கள் கூட எதிர்த்து நின்றனர்! ஏன் என்று கேட்டனர்!

அரசியல் அறிஞர்கள் முழங்கினர்!

"ரோமர்களே! இங்கிலாந்து எங்கள் நாடு! இங்கிலாந்து— நாங்கள் பிறந்த வயிறு! இங்கிலாந்து—நாங்கள் நடந்த மண்! அது, எங்கிருந்தோ வந்த உங்களால் ஆளப்படுகிறது என்பதைத் தெளளத் தெளிவாக உணர்ந்து கொண்டுவிட்டனர் எங்கள் மக்கள்—இந்த நாட்டுக்குரியவர்கள்! உங்கள் ஆதிக்கத்தைச் சரித்திட —அதிகாரத்தைப் பறித்திட— ஆட்சியைப் பற்றிட மக்கள் அலைகளெனக் கிளம்பிவிட்டனர்! அதை உணர்ந்துகொண்டு ஓடிவிடுங்கள்! அதுதான் நல்லது! எங்களுக்கல்ல—உங்களுக்கு!"

சுடோனியஸ் பாலினஸ் சிரித்தான்! வெறிச் சிரிப்புச் சிரித்தான்! தெனபகுதி மக்கள் விடுதலையுணர்வு கொண்டதற்குக் காரணம் பொடீஷியாதான் என்பதை ஒற்றர்கள்மூலம் அறிந்த அவன் பயங்கரமாகச் சிரித்தான்! அந்தச் சிரிப்பின் விளைவு...?

ஜஸ்னிப் பகுதி தாக்கப்பட்டது. அவன் கோர விழிகள் பொடிஷியாவைத் தேடின. கண்டுபிடித்தன. கற்பழிக்க முயன்றான். ஆனால் சில ஆங்கிலேயர்களின் உதவியால் தப்பித்து ஓடி மறைந்தாள் பொடிஷியா!

பெண்மை பீறிட்டெழுந்தது! எலி புலியானது! ரோமர்களின் சட்டதிட்டங்களும் சர்வாதிகாரமும் குவிந்து கொண்டிருக்கும் இலண்டன் மாநகரைத் திக்கிரையாக்க வேண்டுமென்று முழங்கினாள்.

திராக்குகள் இலண்டனைச் சுழட்டி விழுங்கிக்கொண்டிருந்தன. பாலினஸ் படைகள் சிதறி ஓடிக்கொண்டிருந்தன. அச்சமயம் பார்த்திருந்த பொடிஷியா அவர்களைத் தாக்கினாள். பல மைல்களுக்கப்பாலும் நெருப்புப் பொறிகள் வீசின. அதன் மூலம் ஆபத்தையுணர்ந்த பக்கத்து நகரங்களிலுள்ள ரோம் படைகள் புறப்பட்டுவந்தன.

இதை எதிர்பார்க்கவில்லை இலட்சியப் பெண் பொடிஷியா! இருதலைக்கொள்ளி எறும்பு போலத் தவித்தாள்!

எழுபதினாயிரம் ரோமர்கள் இறந்துபட்டனர். இரத்த வெள்ளம் கரைபுரண்டோடிற்று என்று சரிதம் கூறுகின்றது!

பிடிபட்டாள் பொடிஷியா! ஆனால் பிடிபட்ட மறு நிமிடமே வேலை நெஞ்சில் சொருகிக்கொண்டாள். பாலினஸ் கரத்தில் சிக்கி மானமிழந்து அவமானமடைந்து இறப்பதைவிட இப்பொழுதே இறந்துபடுவது நல்லது என்ற எண்ணத்தின் கட்டளைக்கு அவள் கரம் வேலெடுத்தது! வெறியன் பாலினஸ் விழிகளில் ஏக்கத்தின் பிரதிபிம்பம் நிழலாடியது!

உயிர்பிரியும்நேரம்; அப்பொழுது அவள் உதடுகள் எதையோ முணுமுணுத்தன! பாலினஸ் உற்றுக்கேட்டான்!

"தோல்வியைக் கண்ட என் இனத்தின் தோள்கள் நிச்சயம் வெற்றியைச் சுமக்கும்! வெற்றியைத் தூக்கிவைத்திருக்கும் உன் ஆணவத்தின் சிரம் தோல்வியால் நிச்சயம் துண்டிக்கப்படும்!"

பாலினஸ் பல்லைக் கடித்தான்! அவளுடைய உதடுகளை நசுக்கக் காலைத் தூக்கினான். அதற்குள்—இதழ்கள் இறுகமூடின! விழியும் அப்படியே! பொடிஷியா இறந்தாள்!

மாற்றானுக்கு நம் மண்ணிலே என்ன வேலை? மறமற்ற மரபிலா நாம் பிறந்தோம்? மாங்களா நாமெல்லாம்? மண்டியிட்டு வாழ மிருகங்களும் ஒப்பாதே எனக் கூறி, விடுதலைக்கொடியை உயர்த்தப் பாடுபட்டவள் கி. பி. முதலாம் நூற்றாண்டில் பொடிஷியா ஒருவள்தான்! அவள் விதைத்த விடுதலை வித்து, பிற்காலத்தில் நல்ல விளைச்சலைத் தராமல் போகவில்லை—இங்கிலாந்துக்கு!

அரசுக் கட்டிலில் அமர்ந்து கொண்டு ஆதிக்க வெறியர்களை எதிர்த்த அவள் எங்கே? பதவியும் பவிசும் கிடைத்தால் போதும் என்றெண்ணிப் பல்லக்குத் தூக்கும் இவர்கள் எங்கே? அந்த உதயசூரியன் எங்கே? இந்த இருள் எங்கே?

விண்ணுக்கும் மண்ணுக்கும் உள்ள இடைவெளி! ஐஸ்னி—தமிழகம்!

இங்கிலாந்து இங்கிலாந்தியருக்கு ஆகவேண்டும். இதுவே என் இலட்சியம் என்றாள் அவள்—அந்த ஆர்வக்குன்று!

அவளுக்கிருந்த இனப்பற்று—விடுதலை எண்ணம்—வாழ்வா? சாவா? என்ற எழுச்சிக்குரல் நமது அருமந்த ஆளவந்தார்களுக்கு என்றைக்கு வருமோ...!

காலமே? நீதான் பதில் கூற வேண்டும்!

★

அறிக்கை:—

"திராவிட நாடு"

1.	வெளியாகும் இடம்	...	95, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம்.
2.	வெளியிடும் நாட்கள்	...	வாரம் ஒருமுறை
3.	அச்சிடுவோரின் பெயர்	...	சி. என். அண்ணாதுரை
	இனம்	...	திராவிடர்
	முகவரி	...	95, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம்.
4.	வெளியிடுவோரின் பெயர்	...	சி. என். அண்ணாதுரை
	இனம்	...	திராவிடர்
	முகவரி	...	95, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம்.
5.	ஆசிரியரின் பெயர்	...	சி. என். அண்ணாதுரை
	இனம்	...	திராவிடர்
	முகவரி	...	95, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம்.
6.	பத்திரிகையின் உரிமையாளர்களுடைய பெயர்களும் முகவரியும் அல்லது பத்திரிகையில் ஒரு சத விகிதத்திற்கு அதிகமான மூலதனம் போட்டுள்ளவர்களின் பெயர்களும் முகவரியும்.		சி. என். அண்ணாதுரை 95, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம்.

என் அறிவிற்கும், நம்பிக்கைக்கும் நன்கு தெரிந்த மட்டில் மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்று சி. என். அண்ணாதுரையாகிய நான் அறிவிக்கிறேன்.

1—3—59 (ஒப்பம்) சி. என். அண்ணாதுரை.
வெளியிடுவோர்.

ஒருநாள் மன்னன்!

(கருணானந்தம்)

வாக்காளப் பெருமகனே, தேர்தல் நன்னாள்
    வருகின்ற அறிகுறிகள் தெரிந்தா யன்றோ!
மாக்களென உன்னினத்தை மதித்தோ ரெல்லாம்,
    மக்களாட்சி தந்துள்ள மகத்து வத்தால்
நீக்குதற்கு வகையின்றி உன்னை நாடி
    நெருங்குகின்ற விந்தைதனை உணர்ந்தி டாமல்—
ஊக்கமின்றி, நோக்கமில்லா வாழ்க்கை யோடு,
    உட்கார்ந்தே உறங்குகின்றாய்; உத்வே கங்கொள்!

மனிதரிலே மேம்பட்டோர் என நினைக்கும்
    மதோன்மத்தர், தலைகனத்தோர், மனத்தை மூடிப்,
புனிதமிகும் உன்கரத்து வாக்குச் சீட்டால்
    புதுஉறவு பெறவருவார், புரிந்து கொள்வாய்!
இனிதான சமத்துவத்தின் பெருமை பேசி
    எளியோரைச் செல்வர்கள் வசியம் செய்வார்!
கனிவாக அரசியலின் கதையைச் சொல்லிக்
    கண்மறைப்பார், உண்மைக்குப் புறம்பாய் வாழ்வோர்!

இன்றொருநாள் யாவர்க்கும் மன்னன் நீயே!
    ஏழையுந்தன் கரத்திலுள்ள வாக்குச் சீட்டே
சென்றதையும் நிலைநிறுத்தும் செங்கோ லாகும்!
    சீர்தூக்கிச், சிந்தனையைச் செலவு செய்து,
நன்றிதனை மறவாத ஆளைத் தேர்ந்து,
    நன்முறையில் உன்வாக்கைப் பயன் படுத்து!
என்றைக்கும் பணத்துக்குப் பணிதல் வேண்டாம்!
    எப்போதும் தலைநிமிரா வண்ணம் செய்யும்!

சூழ்ந்திருக்கும் துயரங்கள் யாவும் தீர்த்துத்
    தொலைத்துவிட உன்னாலும் ஆகும்! என்றும்,
தாழ்ந்திருக்கும் கட்டாயம் இனியும் இல்லை!
    தகுதிமிகு வாக்காளர் பட்டி யல்மேல்
வாழ்ந்திருக்கும் உன்பெயரின் வலிமை தன்னை
    வகையாக முறையோடு நீயு ணர்ந்தால்,
வீழ்ந்திருக்கும் சமுதாயம் எழுச்சி பெற்று,
    வெற்றியுடன் வீரநடை போடும், நண்பா!

கருத்தடையைக் கண்டிப்பதா? வரவேற்பதா?

மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றதன் நன்கலம் நன்மக்கட்பேறு!

திராவிட நாட்டின் ஒப்புயர்வற்ற பெருஞ் சிந்தனையாளரான திருவள்ளுவர், வாழ்வின் குறிக்கோளை இந்தச் சிறு குறளிலே தெளிவுபடுத்தியிருக்கிறார். வாழ்க்கையிலே இன்பம் தருவது இல்லற வாழ்க்கையென்றும், அந்த இன்பத்தையும் நல்ல பேரின்பம் ஆக்குவது நல்ல மக்களைப் பெறுவது என்றும் அவர் நமக்குக் கூறுகிறார்.

பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க! என்று வாழ்த்துகின்றபோது, நிறையக் குழந்தைகளைப் பெறவேண்டும் என்ற கருத்திலேயே வாழ்த்தப்படுகின்ற இந்த நாட்டிலே, 'கருத்தடை' என்ற சொல் கருத்தைக் கலக்கத்தான் செய்யும்.

'கொல்லா நலத்தது நோன்மை' என்றும், "நோன்பெனப் படுவது கொன்று தின்னாமை" என்றும் கொல்லாமையைப்பற்றி மக்களிடையிலே பரப்பிவந்த, சைவம், வைணவம், சமணம், புத்தம் முதலிய பல சமயங்கள் தோன்றி வளர்ந்தது இந்நாடு. ஈ, எறும்பு கூடக் கொல்லப்படக் கூடாதவை யென்றும், நச்சுப் பாம்பையும் கூடக் கொல்லலாகாது என்றும் கொல்லாமைப் பிரசாரம் நடந்து வந்த நாடு இந்நாடு. இத்தகைய நாட்டிலே 'கருத்தடை' என்ற சொல், உள்ளத்தின் உணர்ச்சிகளைக் கொந்தளிக்கச் செய்யும் என்பது எதிர்பார்க்கக் கூடியதே!

'கருத்தடையைப்'பற்றி முதன் முதலாகப், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள், காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தவொரு பாதை காண்போம் என்று பாடியபோது எதிர்ப்பான கருத்துக்கள் எழுந்தன. அதே கருத்தையே, அரசாங்கத்தினர் இன்று விரிவான முறையிலே பிரசாரம் செய்து, செயலிலும் நடத்தத் தொடங்கிய பிறகு, எதிர்ப்புப் பெரிதாக எழுவதில் வியப்பில்லைதான்!

எதிர்ப்பு எழுவதற்கு முக்கிய காரணங்கள் இரண்டு! முதலாவது, வழி வழியாக மனத்திலே பதிக்கப் பெற்று வந்துள்ள 'பாவம்' என்ற சமய உணர்ச்சி.

நாரா. நாச்சியப்பன்

இரண்டாவது, கருத்தடைக்கும் கருவழிப்புக்கும் உள்ள வேற்றுமையை உணராமல் பேசுகின்ற மன வெழுச்சி!

'கருத்தடை' என்பது, கருவே உண்டாகாமல் தடுப்பது. வைத்திய முறையிலே இந்தத் தடையைச் செய்து கொள்ளுவதும், காந்தியார் கூறியபடி, கணவனும் மனைவியும் ஒன்று சேராமலே தடுத்துக்கொள்ளுவதும் ஒன்றேதான். காந்தியார் கூறிய வழியிலே காதலுக்கு அல்லது இயற்கையெழுச்சிக்கு இடமில்லை; வைத்திய முறையிலே அதற்கு இடமுண்டு என்பது தவிர, இரு முறைகளாலும் கருத் தோன்றாமலே தடை செய்யப்படுகின்றன என்பது மட்டில் முடிவு ஒன்றே!

'கருவழிப்பு' என்பதுதான், சமய வாதிகளின் உணர்ச்சியின்படி பாவமானது; சட்டப்படி குற்றமானது. தோன்றிய பிறகு, கருவைச் சிதைப்பது என்பதுதான், கொலைக்குச் சமமான குற்றம். இந்தச் செயலை எந்தமாதிரியான நல்ல கருத்துடையவர்களும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

உயிர்க் கொலையான 'கருவழிப்பு'க்கும், கருத்தடைக்கும் உள்ள வேற்றுமையை அறிந்துகொண்டால், கருத்தடையைத் தவருகக் கருத இடமில்லை.

கருத்தடையினலே, எதிர்கால சந்ததி தோன்ருமல் தடுக்கப்படுகிறதென்றும், வருங்கால சமுதாயத்தில் தோன்றக் கூடிய சில அறிஞர்களை, மேதைகளை, நாம் இழக்க நேரிடலாமென்றும், பிள்ளைப் பேற்றின் இன்பம் போய்விடுமென்றும் பலப்பலவாருகக் கூறப்படுகிறது.

'கருத்தடை' வேண்டுமென்று கூறுகிறவர்கள், அடியோடு மகப்பேற்றை இழக்கவேண்டுமென்று கூறவில்லை. இல்லற வாழ்வின் இன்பத்தைத் துய்ப்பதற்கு, இரண்டு மூன்று குழந்தைகள் பிறந்தபிறகு, அந்த இன்பம் துன்பமாக மாறிவிடக் கூடாது என்பதற்காகவே கூறுகிருர்கள். பிறக்கக் கூடிய பலப்பல குழந்தைகளைப் பிறக்காமல் தடுப்பதால், வரக்கூடிய மேதைகளையும் இழக்க நேரிடுமென்று பேசுவது, சொல்லாட வேண்டும் என்பதற்காகப் பேசப்படுகின்ற பேச்சேயன்றி, அதிலே பொருளில்லை. பிறந்து வளர்ந்து, வறுமையினுல் துன்பப்படும் எத்தனையோ அறிஞர்கள், தங்கள் அறிவின் பயனை உலகுக்குப் பயன்படுத்த முடியாமலும், தாங்களே வாழ்க்கையைச் செம்மையாக நடத்த முடியாமலும், வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்று முயல்கின்றபோதெல்லாம், ஏற்கனவே முன்னேறியிருப்பவர்களாலும், வசதி படைத்தவர்களாலும் அமுக்கி

வைத்து மறைக்கப்படுகிற கொடுமை நாட்டு வழக்கமாகப் போய்விட்டது. அரசியல்காரணங்களாலும் பொருளாதார வேற்றுமையின் பயனாகவும், உண்மைத் தகுதியுடையவர்கள் ஒதுக்கப் பெற்று, ஒன்றுமில்லாத சிலர் பெரும் மேதைகளாக விளம்பரப் படுத்தப் பெறுவதையும் நாம் காணுகிறோம்.

இப்படித் தோன்றிச் சிறந்த மேதைகளாயிருந்தும், மேதைத் தன்மையைப் பயன்படுத்த முடியாமல், வறுமைப்பிணியால் வாடி வதங்கி நொந்து சாகும் அறிஞர்கள் தோன்றுவதைக் காட்டிலும், தோன்றாதிருப்பதே நன்றல்லவா?

தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

என்று திருவள்ளுவப் பெரியார் கூறியிருப்பதையும் நெஞ்சில் நிலையிருத்த வேண்டும்.

இரண்டு மூன்று பிள்ளைகள் பெற்ற பிறகே கருத்தடை செய்து கொள்ள வேண்டுமென்று கூறப்படுகிறபடியால், பிள்ளைப் பேற்றின் இன்பத்தை நாம் இழக்கவில்லை என்பதோடு மட்டுமல்ல, தொல்லையில்லாத இல்லறம் நடத்துவதற்கும் கருத்தடை துணை செய்கிறது.

பிறக்கின்ற இரண்டு மூன்று பிள்ளைகளும் இறந்துவிட்டால், மீண்டும் பிள்ளை பெறமுடியாத நிலை பெருந்துன்பம் தரும் என்பதும், பிழைபட்ட விவாதமேயாகும். எட்டுப்பத்துப் பிள்ளைகள் பெற்று எல்லாவற்றையும் பறிகொடுக்கின்றவர்களும் உண்டு. ஒரே ஒரு பிள்ளை பெற்று, அவன் நீண்ட நாள் வாழக் காண்பவரும் உண்டு. இப்படி, ஒவ்வொரு குடும்பங்களிலே, இயற்கையாக நடக்கின்ற நிகழ்ச்சிகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு ஒரு பிரச்சினையை முடிவுகட்ட முடியாது. ஒவ்வொருவர் வீட்டிலும் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் இறந்துவிடப் போவதில்லை. ஆகவே, அதுபற்றிப் பயப்படத் தேவையில்லை.

கருத்தடையின் நோக்கமே, வறுமைச் சுழலிலே வாடிக் கிடக்கும் ஏராளமான நாட்டு மக்களின் வாழ்வில் இன்பம் சேர்க்க வேண்டுமென்பதுதான். தங்களால் காப்பாற்றமுடிந்த அளவும், தங்கள் வாழ்வைச் சிறப்பாக நடத்தக்கூடிய அளவும் வேண்டிய பிள்ளைகள் பெற்ற பிறகு, கருத்தடை செய்துகொள்பவனுக்குப் பல நன்மைகள் உண்டு. அவனுடைய பரம்பரைக்கும் பல நன்மைகள் உண்டு. பத்துப் பிள்ளைகள் பெற்ற தாய்க்கு, எல்லோரும் பிள்ளைகளே! எல்லோரும் ஒரு மாதிரியே! அவர்களில் யாரையும் கைவிட்டு யாரையும் மேலாக்கும் மனப்பான்மை வராது. வறுமையில் உழலும் போது, பத்துப் பேரையும் நன்றாக வளர்ப்பதோ, கல்வியறிவு பெறச்செய்வதோ இயலாத காரியம். ஒன்றிரண்டு பிள்ளைகளானால், முழுக் கவனத்தையும் செலுத்தி அவர்களை முன்னுக்குக் கொண்டுவரப் பாடுபட முடியும். பிறக்கும்போது எல்லோரும் ஒரே மாதிரியாகத்தான் பிறக்கிறார்கள். ஆனால், பிறந்த பிறகு, வளர்கின்ற பொழுதுதான், வசதி காரணமாகவும், சூழ்நிலை காரணமாகவும், அறிஞர்களாகவும், மேதைகளாகவும் மாறித் தங்கள் செயலாலும் தொழிலாலும் சிறப்படைகிறார்கள்; அல்லது சிறப்பில்லாமல் வாழ்கிறார்கள்.

பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

என்ற திருக்குறள் கூறும் கருத்தும் இதுவே. எனவே, பிறந்த பிறகு — வளரும் பொழுதுதான அறிஞர்கள், மேதைகள் ஆக்கப்படுகிறார்களே தவிர, பிறக்கும் பொழுதே அவர்கள் அறிஞர்களாகப் பிறப்பதில்லை என்பதை அறிந்தால், கருத்தடை மேதைகள் பிறப்பதைத் தடுக்கிறது என்ற கருத்தின் பொய்மையை அறிந்துகொள்ளலாம்.

கருத்தடை கூடாதென்று கூறுகிறவர்கள், கடைசியாகப் பயன்படுத்துகின்ற விவாதம்தான் விபரீதமானது. கருத்தடை இயக்கம் பரவினால், நாட்டில் ஒழுக்கக் கேடு வளரும் என்பதுதான அது. கருத்தடை இயக்கம் பற்றிய எண்ணம் தோன்றுவதற்கு முன்னாலே ஒழுக்கங் கெட்டவர்கள் இந்த உலகத்தில் இல்லாமல் இல்லை. வேண்டுமானால், ஒழுக்கங்கெட்ட மனப்பான்மை உள்ளவர்களுக்கு 'கருத்தடை' பல வழிகளிலே ஒரு வழியாகப் பயன படலாமே தவிர, ஒழுக்கமாக வாழவேண்டும் என்ற எண்ணம் படைத்தவர்கள், இனிமேல், 'கருத்தடையைப்' பயன்படுத்தி ஒழுக்கம் கெட்டவர்களாக மாறுவார்கள் என்று பேசுவது பொருத்தமற்ற கூற்றாகும்.

வறுமை மிகுந்த இந்த நாட்டிலே, எதிர்காலம் இன்பமாவதற்கும், நம் சந்ததியினர் துன்பமின்றி நல்ல மேதைகளாய், அறிஞர்களாய், ஆற்றல் உள்ள வீரர்களாய் வாழுவதற்கும், குடும்பக் கட்டுப்பாடு இன்றியமையாதது என்பதே என்னுடைய முடிவான கருத்தாகும். நாடு வளம் பெறுகிற காலத்திலே இந்தத் திட்டத்தைத் தளர்த்திக்கொள்ளலாம். நாடு வறுமை நிலை மாறுவதற்குச் செய்யப்படும் பல முயற்சிகளிலே, இம் முயற்சியும் சிறந்த ஒன்றேயென நான் கருதுகிறேன். நீங்களும் சிந்தித்துப் பாருங்கள்! ❋

"தென்னகம்"

சென்ற இருதிங்களாக, 'தென்னகம்' நடைபோடுகிறது நம்மிடையே.

ஏடு தாங்கிவரும் இலட்சியக் கருத்துக்களையும், ஏற்றமிகு தமிழையும், நாமெல்லாம் காண்கிறோம்; மகிழ்கிறோம்.

கொள்கைக்காக, கொள்கையைச் சொல்லவே, முகிழ்க்கும் ஏடுகள், பீடு நடை போடுவதென்பது எளிதல்ல! 'பிளாக்'குகளும், வர்ண விசித்திரங்களும், வழக்க, ஆர்வம் தூண்டிடினும், 'பை' இடம் கொடுக்காது. இவையெல்லாம் இல்லாமலும், இந்த ஏடுகளில் பல, இன்னும் சருகாகாமல், தளிராக உள்ளனவே என்பதுதான், இன்று மாற்றாருக்குள்ள மருட்சியாகும்.

அவர்கள் அறியார், இலட்சிய ஏடுகளை வாங்கும் குடும்பங்கள், அதனையும் ஒரு கடமையாகக் கொண்டிருக்கின்றன என்பதை!. இந்தக் கடமையுணர்ச்சி வளர்ந்து, விரிந்து, அதிகமாகி வருவதால்தான், அதிக ஏடுகள் கிளம்பவேண்டும் என்று நாம் ஆசை கொள்கிறோம்!!

"தென்னகம்" தரும் நண்பர் கே. ஏ. மதியழகன் அவர்கள் மாணவப்பருவம் தொட்டே, கழகத் தொண்டுக்காக தன்னை அர்ப்பணித்தவர். கற்றதை, மற்றவருக்குத் தருவதில், களிபேருவகைகொண்டு, இதுபோது காரியமாற்றுகிறார். அறிவும் தமிழும் கமழ்கிறது, தென்னகத்தில்! ஆதரவு தர வேண்டியது, அனைவரின் பொறுப்புமாகும்.

தனி இதழ் 16-காசு
ஆண்டு சந்தா ரூபாய் 8.

முகவரி:-

தென்னகம், சென்னை 1.

கலப்பு மணத்தால்தான் ஜாதி
பிரச்னைக்கு தீர்வுகாண முடியும்..
" மகாத்மா காந்தி "
இக்கருத்துரைக்கு விளக்கமாக
அமைந்திருக்கும் சித்திரம்..
கூடி வாழ்ந்தால்
கோடி நன்மை
டைரக்ஷன் D.S.ராஜகோபால்
சென்னை: கெயிட்டி, பாரத்,
காமதேனு, மகாலக்ஷ்மி
மற்றும் தமிழ்நாடெங்கும் நடைபெறுகிறது..
A.K.GOPAL & Co.